DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 282-2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 4 |
| Name | திரு. மார்ட்டின்பனிராஜ் (மருத்துவர்) |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 0 04- 01-2023

**முதல்விசாரணை**

1. நான் தற்போது திருநெல்வேலி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் பொதுஅறுவை சிகிட்சை பிரிவில் உதவி பேராசிரியராக பணிசெய்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 17-10-2011 தேதி நான் திருச்செந்தூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது இரவு 11-40 மணி அளவில் ராஜகுரு த/பெ முத்துக்குட்டி 15 வயதுடைய நபரை அவரது நண்பர் தெய்வமணிஎன்னிடம் சிகிட்சைக்கு அழைத்து வந்தார்

2. அவர் தன்னை இனம் தெரிந்த ஒருவர் அன்றிரவு 10-30 மணிக்கு குரும்பூர் மெயின்ரோட்டில் வைத்து கம்பு கொண்டு அடித்ததாக கூறினார். நான் அவரை பரிசோதனை செய்த போது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது. காயம் 1) வலது பிராண்டல் பகுதியில் 2x1x1 Cm அளவில் சிதைந்த காயம் காணப்பட்டது அவருக்கு முதலுதவி சிகிட்சை வழங்கி மேல்சிகிட்சைக்காக தூத்துக்குடி மருத்துவகல்லூரி மருததுவமனைக்கு அனுப்பினேன்.

தூத்துக்குடி அரசுமருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிட்சைகுறிப்புகளின் அடிப்படையிலும் சி.டி.ஸ்கேன் ரிப்போட்டின் அடிப்படையிலும் Right Frontal bone depressed fracture இருந்தது .அவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். **நான் வழங்கிய காயச்சான்று அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. உதவி

ஆய்வாளர் என்னை இது சம்மந்தமாக விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட சிதைந்த காயத்தில் ரத்தம் உறைந்த நிலையில் இருந்ததா, வடிந்தநிலையில் இருந்ததா என்றால் ஆவணங்களில் புலப்படவில்லை ஆனால் உறைந்த நிலையில் இருந்தது பொதுவாக சி.டி.ஸ்கேன் எடுப்பதற்கான நோக்கம் என்ன என்றால் மூளையில் ரத்த கசிவு உள்ளதா,எலும்பு முறிவு உள்ளதா என்பதை பரிசோததிக்க எடுக்கப்படுகிறது.

காயம்பட்ட நபருக்கு ஏற்பட்ட காயம் தலைகுப்புற விழுந்தால் ஏற்பட வாய்புள்ளதா என்றால் வாய்பில்லை. காயத்தின் தன்மையை வைத்துக்கொண்டு எவ்வளவு நேரத்திற்கு முன்பாக அவருக்கு காயம் ஏற்பட்டிருக்கும் என்று என்னால் சொல்லமுடியுமா என்றால் சுமார் 1/2 மணி நேரத்தில் இருந்து ஒருமணி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்கும்.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 282-2014 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 5 |
| Name | திரு. சின்னத்துரை |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 04-01-2023

முதல்விசாரணை

நான் தற்போது ஆழ்வார்திருநகரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிசெய்கிறேன். நான்
நான் குரும்பூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணிசெய்த போது கடந்த 18-10-2011 தேதி காரைல 11.00 மணிக்கு உத்தரவுப்படி திருச்செந்தூர் தாலுகா காவல்நிலையம் சென்று வானுவன்விளை முத்துக்குட்டிமகன் ராஜகுரு என்பவரின் காயதகவலைப் பெற்று திருச்செந்தூர் அரசு மருத்துவமனை சென்றுவிசாரித்ததில் ராஜகுரு மேல்சிகிட்சைக்காக தூத்துக்குடி அரசுமருத்துவமனை சென்ற விவரம் தெரிந்து தூத்துக்குடி அரசுமருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிட்சையில் இருந்த ராஜகுரு என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்றும் அதில் அறிவேன் சாட்சியாக ராஜகுரு அம்மாவிடம் கையொப்பம் பெற்று நிலையம் 16.30 மணிக்கு வந்து அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 193/2011 இதச 294(பி), 323,506(1) ஆக வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் ஸ்ரீவைகுண்டம் அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தோன் விசாரணை நகலை விசாரணை

அதிகாரி பார்வைக்கு வைத்தேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

**சொன்னநேரத்தில் சொன்னவிதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லைன்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.1 னிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் மட்டும் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல புகார்மனு புகார்வாக்குமூலம் போலிசாரால் உருவாக்கப்பட்டது என்றால் சரியல்ல.**

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1
ஸ்ரீவைகுண்டம்.